**கவனிக்க.**-2024.07.19 ஆந் திகதிய 2394ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2395 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2395 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 132 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஓகத்து மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## பாராளுமன்றம்

### மஹரகம பௌத்த இளைஞர் சங்கம்

### 1998 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மஹரகம பௌத்த இளைஞர் சங்கத்தினை கூட்டிணைக்கும் சட்டத்தினை திருத்தியமைக்கும் உத்தேச சட்டம்

உதய கம்மன்பிள ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுப் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையான கட்டளைகளுக்கு அமைவாக "1998 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மஹரகம பௌத்த இளைஞர் சங்கத்தினை கூட்டிணைக்கும் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கான உத்தேச சட்டத்தினை " பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு கருதுவதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

சட்ட வரைவின் நோக்கமாவது கீழ்க்காணும் திருத்தங்களை குறித்த அச் சட்டத்திற்கு உள்வாங்குவதாகும்:

01. பிரதான சட்டத்தின் "முகாமைத்துவக் குழு" எனும் சொற்களுக்குப் பதிலாக "நிர்வாகக் குழு" எனும் சொல்லினை பதிலீடு செய்தல்;

02. பிரதான சட்டத்தின் 5 ஆம் பிரிவில் 1 வது உப பிரிவில் "தலைவர், உப தலைவர் மூவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், உப பொருளாளர் மற்றும் மேலும் இருபத்திநான்கு உறுப்பினர்கள் என்பதற்குப் பதிலாக தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், பிரதித் தலைவர் ஒருவர், பிரதிச் செயலாளர் ஒருவர், பிரதிப் பொருளாளர் ஒருவர், உப தலைவர்கள் மூவர், உப செயலாளர்கள் மூவர், உப பொருளாளர்கள் மூவர் மற்றும் இருபத்தி நான்கு உறுப்பினர்களுடன்" என்ற விடயம் பதிலீடு செய்யப்பட்டு குறித்த அந்தப் பிரிவு திருத்தம் செய்யப்படல்.

உதய கம்மன்பிள,
பாராளுமன்ற உறுப்பினர்.

07- 631

---

### மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் ( கொழும்பில் நடைபெறுகின்ற) குடியியல் /வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்

இல.72/ 28, சணி குணவர்தன மாவத்தை, ஹெந்தளை, வத்தளை என்ற முகவரியில் அதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள ஏ.எம்.எல். யுனிவேர்சல் திரேடிங் (பிவிடி) ( P.V.6567)இன் முடிவுறுத்தல் தொடர்பான விடயமாவது

வழக்கு இலக்கம் : CHC/ 39/ 2024/CO
தன்மை: ஒடுக்குதல்
செயல்முறை: சுருக்கம்

1. சின்னையா மணிவண்ணன், இல. 72/ 28, சணி குணவர்தன மாவத்தை, ஹெந்தளை, வத்தளை.

மனுதாரர்

மேற்படி நிறுவனத்தை ஒடுக்குவதற்காக 2024, யூன் மாதம் 14 ஆந் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வாணிப மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் ( குடியியல் அதிகார எல்லைக்குள்) நடாத்தப்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2024, ஒற்றோபர் 1 ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது

அவரது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துனருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ.டீ. ஷியாமலி ஐ. அத்துகோரல,
மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி,
இல. 166/1, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

**குறிப்பு**: அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது சமுகமளிப்பதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணி க்கு எழுத்து மூலம் அறிவித்துக் கையளிக்க வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது ( சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2024, செத்தெம்பர் 30 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு ( மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு ) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

07- 684